6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: "தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட" முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, நான் இது சம்பந்தமாக டிஸ்ஸப்ரூவல் நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். ஆகவே, அறிமுக நிலையிலேயே என்னுடைய எதிர்ப்பை நான் தெரிவிக்க வேண்டும். அதற்கு தாங்கள் அனுமதிக்க வேண்டும்.

தலைவரவர்களே, 'காம்பவுண்டிங் டாக்ஸ்' கொண்டு வருகிற காரணத்தால் வரி விதிப்பு விகிதம் அதிகமாக இருக்கிறது. அதைக் குறைக்க வேண்டுமென்று முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிமுக நிலையில் இதையெல்லாம் சொல்லக்கூடாது. விதிமுறைகளை ஒட்டி ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்லலாம். அறிமுக நிலையில் விவாதம் செய்யக்கூடாது. பாராளுமன்றத்தில் இந்தமுறையை அனுமதிப்பதில்லை. டிஸ்ஸப்ரூவல் நோட்டீஸ் கொடுத்திருக்கிறீர்கள் என்றால் விவாதம் வரும்போது ஸ்டேஜ் பை ஸ்டேஜாக உங்கள் கருத்தைச் சொல்லலாம்; இப்போது இல்லை.

திரு. அ. ரகுமான்கான்: நம்முடைய விதிமுறையில் இடம் இருக்கிறது. அதன்படி நான் நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். அறிமுக நிலையிலேயே கருத்துச் சொல்ல வழிவகை இருக்கிறது. என்னுடைய 'ரைட்டை கட்' செய்யாதீர்கள். ப்ரொசீஜரை மாற்றாதீர்கள். சுருக்கமாகச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

Mr. Speaker; If a motion for leave to introduce abill is opposed, the speaker, after permit ing, 'if he thinks fit'

அதன் பிறகுதான் நீங்கள் ', 2, 3 என்று உங்கள் கருத்துக்களைச் சொல்லலாம்; எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால் அறிமுக நிலையில் இதை 'எதிர்க்கிறேன்' என்று சொல்லலாம்; விவாதம் நடத்த முடியாது.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, இப்போதும் சொல்லலாம். அதற்காகத்தான் டிஸ்ஸப்ரூவல் நோட்டீஸ் கொடுத்தேன் அதுவும் அப்ரூவ் பண்ணி வந்திருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சட்டமன்ற மரபுப்படி ஒரு சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கின்றபோது 'அறிமுகம் செய்வதை எதிர்க்கிறேன்' என்று சொல்லலாம். மற்ற கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்றால் சட்டமுன்வடி விவாதத்திற்கு வருகிறபோது விளக்கமாக கருத்துக்களைச் சொல்லலாம். அதன்பிறகு 'ரீடிங்' என்று வருகிறபோதும் கருத்துக்களைச் சொல்லலாம். ஆனால் அறிமுகம் செய்யும்போது விவாதம் செய்ய இடமில்லை.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவரவர்களே, Under Rule 124 (8) if a motion for leave is to introduce a Bill opposed, the Speaker, after permitting if he thinks fit a brief statement from the member who moves and from a member who opposes the motion may without further debate put the question thereon
என்று இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த விதியின்படி அவர் எதிர்க்கலாம். 'அறிமுகம் செய்வதை எதிர்க்கிறேன்' என்று சொல்லலாம். ஆனால் விவாதம் செய்ய இடமில்லை.

திரு. அ. ரகுமான்கான்: நடைமுறையில் இருக்கக்கூடிய விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். தாங்கள் உறுப்பினர்களின் உரிமையைப் பாதுகாக்க வேண்டும். அறிமுக நிலையிலேயே என்னுடைய எதிர்ப்பைத் தெரிவிக்காமல் வேறு எப்போது எதிர்ப்பைத் தெரிவிக்க முடியும்? ஆகவே, சுருக்கமாகச் சொல்வதற்கு அனுமதி அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் நேரத்தை வீணாக எடுத்துக் கொள்கிறீர்கள்.

திரு. அ. ரகுமான்கான்: நான் அதிக நேரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. சுருக்கமாகப் பேசி முடித்துவிடுகிறேன். இதுவரையிலும் தொடர்ந்து இப்படி அப்போஸ் பண்ணும்போது பேசிக் கொண்டுதான் வருகிறோம். (குறுக்கீடு) என்னுடைய ரைட்ஸ்களை கர்ட்டைல் பண்ணாதீர்கள். ரூலை வேண்டுமானால் பாருங்கள். நோட்டீஸ் கொடுத்துவிட்டு சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தொடர்ந்து எதை எதையோ தான் பேசுகிறீர்கள். அதெல்லாம் எடுத்துக் கொள்ள முடியாது. ரூலிலே கிளியராக இருக்கிறது.

'if a motion for leave to introduce a Bill is opposed the Speaker after permitting if he thinks fit

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(பேரவைத் தலைவர்)

புரிகிறதா? திரு. பொன்னுரங்கம் அவர்களுக்கும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன்—நான் விரும்பினால்தான் உங்களை பேச அனுமதிக்க முடியும்.

திரு. அ. ரகுமான்கான்: சார். இங்கே நீங்கள் தான் ஆல் இன் ஆல், அதிலே பிரச்னை இல்லை முடிவு எடுப்பது நீங்கள்தான் என்னை அனுமதித்திருந்தால் இதற்குள் நான் சொல்ல நினைத்த ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லி முடித்திருப்பேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஏதாவது காரண காரியங்களோடு எதிர்த்து சில விபரங்களை மட்டும் சொன்னால் நான் பாராட்டி வரவேற்கத் தயாராக இருக்கிறேன். முழுவதுமாக பில் ஆய்வு செய்யப்படும்போது பேசுவதுபோல் பேசிக் கொண்டிருந்தால் அவையை எப்படிச் செம்மையாக நடத்த முடியும்?

மாண்புமிகு திரு. எஸ் டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவினை எதிர்க்கிறார்கள் என்றால், காம்பவுண்டிங் முறையை எதிர்க்கிறேன் என்று சொல்லட்டும். அது குறித்து விரிவாக விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க அன்பழகன்: தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அவர்கள் எதிர்ப்பதன் கருத்து, கொண்டு வரப்பட்டிருக்கும் பில்லிலே காம்பவுண்டிங் முறையில் சில சிக்கல்கள், இடையூறுகள் ஏற்படுகின்றன ஆகவே அது தேவையில்லை என்ற முறையிலேயே எதிர்க்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே, பேராசியர் அவர்களின் கருத்துக்களையே தாங்கள் அடாப்ட் செய்துக் கொள்ளலாம். நான் வேறு ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் ரைஸ் பண்ண அனுமதி அளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; சற்று இருங்கள். பில்லை அவையிலே அறிமுகப்படுத்தட்டும். பிறகு நீங்கள் பேசலாம்.

பேரவை முன்னுள்ள கேள்வி: ''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்க வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச்சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

1983 பிப்ரவரி 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

கேளிக்கை வரி (இரண்டாவ திருத்த) சட்டமுன்வடிவு, 1983 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(ஆ) கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்டமுன் வடிவு, 1983.

மாண்புமிகு திரு. எஸ். டிசோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோரு கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெறுவதை நான் எதிர்க்கிறேன். ஏனெனில் இந்த காம்பவுண்டிங் டேக்ஸ் முறையில் பல சிக்கல்கள் நடைமுறையில் இருக்கின்றன ஊட்டியிலே இருக்கக்கூடிய.—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெளிவாகக் குறிப்பிட்டு கேட்டுக் கொண்டேன், அறிமுக நிலையில் தயவுசெய்து விளக்கம் அதிகம் வேண்டாம் என்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், காம்பவுண்டிங் முறையில் என்னென்ன குறைபாடு ள் என்று விளக்கமாக பேச ரம்பித்திருக்கிறார்கள். ஊட்டி என்றும் கொடைக்கான என்றும் இதிலே விளக்கமாக போய்க் கொண்டிருக்க நியாயமில்லை என்பதை தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்; தலைவர் அவர்களே, உங்களுக்கே மிக நன்றாகத் தெரியு . காம்பவுண்டிங் டாக்ஸ் முறையில் இருக்கும் சில அடிப்ப ட குறைபாடுகள்; ஊட்டியிலே 6 தியேட்டர்கள கட்டப்பட்டிருக்கிறன. அங்கிருக்கும் ஜனத் தொகை கணக்கின் படி வசூல் அவ்வளவு சிறப்பாக இல்லை ஆகவே நஷ்டம் வருகிறது என்று சொல்கிறார்கள். 21 காட்சிகள் காட்ட முடிவதில்லை 17 காட்சிகள் தான் காட்ட முடிகிறது. புதுக்கோட்டையிலே 80,000 பேர்கள்தான் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுறது. 12 தியேட்டர்கள்